01.09.2021

அசல் வழக்கு எண். 268/2017

வா.சா.2 சேதுராமன் மனுவின்பேரில் பிரதிவாதி தரப்பில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் பி.எஸ்.சி. கணிதம் படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் என் மனைவி சொல்லித்தான் நான் தயார் செய்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கு பற்றிய விபரங்கள் எனது மனைவி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் எனது மனைவி மற்றும் எனது தாயார் சொல்லி தெரியும். எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து அம்பிகாவிற்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், இதர பரிகாரம் கோரியும் 2017 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கு தொடர்பாக என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியும். சுந்தர்ராஜ் கிரையம் பெற்று அனுபவத்திற்கு வந்தபிறகுதான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 1950 முதல் அனுபவம் எங்களிடம்தான் உள்ளது. பிரதிவாதி சுந்தர்ராஜ் எந்த ஆண்டு கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் 2016 ல் கிரையம் வாங்கினார் அது எங்களுக்கு ஒரு ஆண்டு பிறகுதான் தெரியவந்தது. விபரம் தெரிந்த பிறகு நாங்கள் வழக்கு தாக்கல் செய்துவிட்டோம் என்றால் சரிதான். எனது மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் நான்குமாலும் சுந்தர்ராஜ் கிரையம் பெற்ற சொத்தின் நான்குமாலும் வேறு வேறு என்றால் சரிதான். எனது மனைவியின் தகப்பனார் கிரையம் வாங்கும்போது நான்குமாலில் இருந்த நபர்கள் தற்போது மாறிவிட்டனர் அதனால் இரண்டு சொத்திற்கும் நான்குமால் வேறு வேறாக இருக்கிறது. வழக்கு தாக்கல் செய்யும்போது இருந்த நான்குமாலை வைத்து வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, எனது மனைவியின் தகப்பனார் கிரையம் பெற்ற பத்திரத்தின் அடிப்படையில் நான்குமால் சொத்துவிபரத்தில் குறிப்பிட்டுள்ளேன். தற்போது ஸ்தலத்தில் என்ன

நான்குமால் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிழக்கே சங்கரநாராயணன், மேற்கே காலனி வீடு, தெற்கே சமயன் வகையறா, வடக்கே நாராயணதேவர் வகையறா. இந்த நான்குமால் சுந்தர்ராஜ் வாங்கிய கிரைய பத்திரத்தில் கிடையாது என்றால் சரியல்ல. சுந்தர்ராஜ் வாங்கிய கிரைய சொத்து எங்களது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. அந்த நிலம் தரிசாக உள்ளதா என்றால் இதுவரை சாகுபடி செய்து வந்தோம், இந்த ஆண்டு மட்டும்தான் சாகுபடி செய்யவில்லை. ஆள்மாறாட்டம் செய்து போலி பத்திரம் சுந்தர்ராஜ் தயாரித்தார் என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி சுந்தர்ராஜ் அனுபவத்தில் தான் இதுவரை நிலம் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் தான் 50 வருடத்திற்கு மேலாக அனுபவத்தில் உள்ளோம். நான் வழக்கு தாக்ல செய்துள்ள நான்குமாலும், சுந்தர்ராஜ் கிரைய பத்திரத்தில் உள்ள நான்குமாலும் வேறு வேறு என்றும், வழக்கு சொத்து விரபம் தெரியாமல் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியபடி நாங்கள் பெரியோர்களை பஞ்சாயத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பஞ்சாயத்திற்கு வந்தவர்களை வைத்து நான் நிரூபண வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரரணை இல்லை.

sd/– Sethuraman

sd/– N.Renuga,
Additional District Munsif,
Thirumangalam.